திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை கூட்டரங்கில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடுகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், ச.சசிகாந்த்செந்தில் எம்.பி. திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ , துரைசந்திரசேகர் எம்.எல்.ஏ பல்வேறு துறை சார்ந்த அரசு அலுவலர்கள் நகர்ப்புற உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.10.2025 அன்று வில்லிவாக்கம், சிவசக்தி நகரில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன் வர்த்தக மையம் திறக்கப்படவுள்ளது. இதனை நேற்று அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் நிகழ்ச்சி முன்னேற்பாடு பணிகளை ஆய்வு செய்தனர். உடன் வெற்றி அழகன் எம்.எல்.ஏ., மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 232 வது நாள்!

அம்பத்தூர் தெற்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,அக்.10-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 232 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (09.10.2025), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 87, ஆசைத்தம்பி தெரு, மதியழகன் நகர், பாடி. 2) வட்டம் - 89, கோல்டன் காலனி, அவ்வை நகர் கார்னர், அம்பத்தூர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ் நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதி மொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி. எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் தெற்கு/வடக்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன் குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்

மாநில அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை -– 2025

ரூ.15.75 லட்சம் மதிப்பில் காசோலைகள் - பதக்கங்கள் - சான்றிதழ்கள்!

பள்ளி மாணவ – மாணவியருக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கி – பாராட்டு!

சென்னை, அக்.10-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று (9.10.2025) ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் மாநில அளவில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பை பள்ளி மாணவ, மாணவிகளுக்கான பளு தூக்குதல் மற்றும் வாள் வீச்சு விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்கள், மொத்தம் 15.75 லட்சம் ரூபாய்கான பரிசுத்தொகை காசோலைகள், சான்றிதழ்கள் மற்றும் முதலமைச்சர் கோப்பை நினைவு சின்னம் ஆகிய வற்றை வழங்கினார்.

இந்நிகழ்வு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடத்தப்படும் முதலமைச்சர் கோப்பை 2025 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்கள் 25.08.2025 அன்று சென்னையில் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைப் போட்டியில் மாவட்ட அளவிலான போட்டிகளில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுப் பிரிவினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் உள்ளிட்ட 16,28,338 பேர் இணையதளத்தின் மூலம் முன்பதிவு செய்து, 5 பிரிவுகளில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, இப்போது மாநில அளவிலான போட்டிகள் அக்டோபர் 2 ஆம் தேதி 2025 முதல் 14 ஆம் தேதி 2025 வரை 5 பிரிவுகளில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகள் சென்னை, கோயம்பத்தூர், திருச்சி, மதுரை மற்றும் செங்கல்பட்டு முதலிய 13 நகரங்களில் மாவட்ட மற்றும் மண்டல அளவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 30,136 வீரர்களுக்கு நடைபெற்று வருகிறது.

முதலமைச்சர் கோப்பை 2025 போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கும் வகையில் ரூ. 37 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் நேற்று (9.10.2025) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் கல்லூரி மாணவர் மற்றும் மாணவிகளுக்கிடையே நடைபெற்ற பளு தூக்குதல் போட்டியில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு பரிசுத் தொகையாக ரூ.9 லட்சம் மதிப்பிலான காசோலைகள், பதக்கம் மற்றும் சான்றிதழ்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மா.சுப்பிரமணியன், விளையாட்டு, வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கினார்.

அதேபோன்று வாள் வீச்சு பிரிவில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ரூ.6.75 லட்சம் மதிப்பிலான காசோலைகள், என மொத்தம் ரூ. 15.75 லட்சம் மதிப்பிலான காசோலைகள், பதக்கம் மற்றும் சான்றிதழ்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பொது மேலாளர் திருமதி. எல். சுஜாதா, பொதுமேலாளர் திருமதி. எல்.சுஜாதா, துணைபொது மேலாளர் திருமதி. நோயளின் ஜான், நேரு விளையாட்டு அரங்க அலுவலர் வெங்கடேஷ் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

திருவொற்றியூர் 8வது வட்டத்தில்

பாக முகவர்கள் - ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

இரா.முருகேசன் – டி.சி.வி. மணிகண்டன் பங்கேற்பு!

சென்னை, அக்.10-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றி யூர் கிழக்கு பகுதி 8வது வட்டத்தில் உள்ள முன்னாள் எம்.எல்.ஏ. டி.சி.விஜயன் இல்லத்தில் பாக முகவர்கள், ஒருங்கிணைப்பா ளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா. முருகேசன் தலைமை தாங்கி ஆலோசனை வழங்கினார்.

8வது வார்ட் மாமன்ற உறுப்பினர்சி, டி.சி.வி.ராஜகுமாரி விஜயன் முன்னிலை வகித்தார். 8வது வட்டக் கழக செயலாளர் டி.சி.வி.மணிகண்டன் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.

இதில் டி.டி.எம்.பாபு, வை.நந்திவர்மன், அபூபக்கர் சித்திக், வி.ஆர்.சீனிவாசன், மா.கணேசன், வை.செந்தில்வேலன், மூர்த்தி, முனுசாமி, தி.மு.சரவணன், சு.சந்தானம், ஜி.செல்வதாஸ், ஏ.அருளானந்தம், சுகந்தாமுனுசாமி, எம்.எஸ். தினேஷ் வேலன், ஏ.அரங்கநாதன், எஸ்.சீனிவாசன், இ. ஆனந்த், சி.எஸ்.ஆர்.ஜெகன், எஸ்.சசிகுமார், க.சிவக்குமார், மகேஷ் குமார், எஸ்.வெங்கடேஸ்வரன், வி.வி.வி. வினோத், வைரமணி, ச. சுரேஷ், அரவிந்த், ஜெகதீசன் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டம், 78வது வட்டம், வெங்கடாச்சலம் தெருவில் புதுப்பிக்கபட்ட நியாய விலை கடையை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சென்னை மாநகராட்சி நியமன குழு உறுப்பினர் சொ.வேலு திறந்து வைத்தார். நிகழ்வில் வட்ட கழக செயலாளர்கள் ந.பாலு, சு.மனோகர், கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள்,கூட்டுறவு துறை சார்ந்த நிர்வாகிகள் இருந்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 8வது வட்டத்தில் உள்ள முன்னாள் எம்.எல்.ஏ. டி.சி.விஜயன் இல்லத்தில் பாக முகவர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா. முருகேசன் தலைமை தாங்கி ஆலோசனை வழங்கினார். டி.சி.வி.ராஜகுமாரி விஜயன் முன்னிலை வகித்தார். 8வது வட்டக் கழக செயலாளர் டி.சி.வி. மணிகண்டன் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார். இதில் டி.டி.எம்.பாபு, வை.நந்திவர்மன், அபூபக்கர் சித்திக், வி.ஆர்.சீனிவாசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

சென்னை மேற்கு மாவட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஆயிரம்விளக்கு, அண்ணாநகர் மற்றும் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் கழக தலைவைர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நியமிக்கப்பட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co-ordinators) ஆலோசனைக் கூட்டம் (11.10.2025 சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில், நுங்கம்பாக்கம், வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஐய்துன் உணவகத்தில் (zaitoon hotel) மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மண்டல தேர்தல் பொறுப்பாளர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Co-ordinators) ஆகியோர் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நே.சிற்றரசு

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ தலைமை! கே.ஏழுமலை எம்.சி - கோ.சு.மணி முன்னிலை!

தியாகராயர்நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

ஆ.இராசா எம்.பி - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - மயிலை த.வேலு எம்.எல்.ஏ - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. சிறப்புரை!

சென்னை, அக். 10

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், BLA2, BDA நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் (12.10.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, கோடம்பாக்கம், பவர் ஹவுஸ், அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி தலைமை வகிக்கிறார்.

தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தியாகராயர் நகர் தொகுதிப் பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

எனவே தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இந்நாள் முன்னாள் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் ந.மோ. முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, வடபழனி டி.கமல், தட்சன் ஹரிஹரன், பி.ஜெய்குமார், தி.நகர் பி.மாரி, எம்.எஸ்.பழனி, மு.செல்வகுமார், வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மு.ம.செந்தில்குமார், ஆர். சக்திவேல், ஜி.பி.செந்தில்குமரன், லலிதா புரம் என். துரை, வழக்கறிஞர் எஸ். லட்சுமிகாந்தன் ஆகியோர் நிகழ்ச்சியின் இறுதியில் நன்றி கூறுகின்றனர்.

மணலி – மாதவரம் மண்டலங்களில்

ரூ.1.38 கோடி மதிப்பில் புதிய திட்டப்பணிகள்!

மேயர் திருமதி ஆர். பிரியா அடிக்கல் நாட்டினார்!

சென்னை,அக்.10-

மணலி மண்டலம், வார்டு-15, மணலி புதுநகர் 80 அடி சாலையில் மேயர் சிறப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் மகளிர் நவீன உடற்பயிற்சிக் கூட கட்டுமானப் பணிகளை மேயர் திருமதி ஆர்.பிரியா அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மணலி மண்டலத்தில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில், மகாலட்சுமி நகர் பகுதியில் உள்ள சி.எம்.டி.ஏ. கால்வாய் அருகில் மரக்கன்றுகளை நட்டார். தொடர்ந்து, சி.எம்.டி.ஏ. கால்வாயில் தூர்வாரி மழைநீர் தங்குதடையின்றி செல்வதற்கான நடவடிக்கைகள் குறித்தும், கால்வாயில் நீர் வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டமைப்புகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், வார்டு-15, மணலி புதுநகரில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து, அதன் அருகில் செயல்பட்டு வரும் மாநகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் வார்டு-22, சின்ன சேக்காடு, தேவராஜன் தெருவில் மேயர் அவர்களின் சிறப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியில் ரூ.27 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சத்துணவுக் கூடத்தினையும், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இந்திய பெட்ரோலிய கார்ப ரேஷன் லிமிடெட் நிறுவனம் இணைந்து நமக்கு நாமே திட்ட நிதியில் ரூ.32.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குழந்தைகள் மையக் கட்டடத்தினையும் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மேயர் அவர்களின் சிறப்பு மேம்பாட்டுத் திட்ட நிதியில் மாதவரம் மண்டலம், வார்டு-28, தனசிங் மேஸ்திரி சாலையில் ரூ.54.30 இலட்சம் மதிப்பீட்டிலும், வார்டு-33, டீச்சர்ஸ் காலனி, 4வது பிரதான சாலையில் ரூ.33.50 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்படவுள்ள மகளிர் நவீன உடற்பயிற்சிக் கூட கட்டுமானப் பணிகளை மேயர் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, மாதவரம் மண்டலம், வார்டு-30, ரெட்டேரி, ஜவஹர்லால் நேரு 200 அடி சாலையில் உள்ள உமாயா மஹாலில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மேயர் பார்வையிட்டு, மனுக்கள் அளிக்க வந்த பொது மக்களிடம் கலந்துரையாடி தேவைகள் குறித்து, கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம் (மாதவரம்), துரை சந்திரசேகர் (பொன்னேரி), வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டாரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர்கள் ஏ.வி.ஆறுமுகம் (மணலி), எஸ்.நந்தகோபால் (மாதவரம்), மாமன்ற உறுப்பினர்கள் திருமதி நந்தினி சண்முகம், ஆ.ராஜேந்திரன், அ. தீர்த்தி, திருமதி சு. கனிமொழி, திருமதி மோ. குணசுந்தரி, கோ.துரைசாமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் .ராஜேஷ் தந்தையும் 61வது வட்டத் துணைச் செயலாளர் திருமதி பூங்கொடியின் சகோதரருமான நாராயணன் இயற்கை எய்தியதையடுத்து, வழக்கறிஞர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார். உடன் ஜெ.விஜயகுமார், கோ.சுந்தர்ராஜ், நித்திஷ் கிரிதரன் ஆகியோர் உடனிருந்தனர்.

திருவள்ளூர் மாவட்டம்பூவிருந்தவல்லி தொகுதி எல்லாபுரம் ஒன்றியம் தாமரைப்பாக்கம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இதில் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி முகாமை தொடங்கி பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் சான்றிதழ்கள் வழங்கினார் உடன் ஒன்றிய செயலாளர் தங்கம் முரளி, பி.ஜி.முனுசாமி, டி.பாஸ்கர், ஜி.அன்பு, இ.சுப்பிரமணி, உமா சீனிவாசன், ஸ்ரீதர், தங்கராஜ், ஜெகன், எஸ். ராகு, வெங்கல் ஜி.சங்கர், டி.சர்தார், முகமது ரஃபி, உள்பட நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.